DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 140 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திருமதி கண்மணி |
| Father Name | தியாகராஜன் |
| Village | குரங்கனி |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர் – எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 11-06-2026.(நேரம்: )**

**(சாட்சி சிஆர்எம்பி எண் 24/25 என்ற இடைநிலை விண்ணப்ப மனுவில் கடந்த 14.10.2025 ஆம் தேதி இந்த நீதிமன்றத்தால் பிறப்பிவிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மீள அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் புகார்தாரர் அலிஸ் என்ன உறவு முறை என்று கேட்டால் எனது கொழுந்தன் மனைவியவார்.

2.என் எதிரிகள் என்ன உறவுமுறை என்று கேட்டால் கொழுந்தன் மற்றும் அவரது மகன் ஆவார்.

3.எனக்கும், எதிரிகளுக்கும், சொத்து தொடர்பாக பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை.

4. ஒன்றாவது எதிரியின் மனைவி பேர் என்ன என்றால் கிறிஸ்டி ஆகும்.

5.எதிரிகளுக்கும், எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான்.

6. குரங்கனி மெயின் ரோட்டில் இருந்து எங்கள் வீட்டிற்கு செல்லக்கூடிய பாதை எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும் சொந்தமானது என்றும் அதில் மூன்றாவது நபர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

7.பொதுபாதையை ஒட்டி அலிஸ் எத்தனை ஜன்னல் வைத்துள்ளாரா என்றால் ஆம் ஜன்னல் வைத்துள்ளார்.

8.அந்த வழியாக தான் எங்கள் வீட்டிற்கும், மற்ற வீடுகளுக்கும், செல்லமுடியும் மற்றும் பொருள்களை கொண்டுபோக முடியும் என்றால் சரிதான்.

9.அலிஸ் மீது 1 ஆம் எதிரி மனைவி கிறிஸ்டி ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து காவல் நிலைய குற்ற எண் 39/21 சட்டபிரிவுகள் 294(பி),506(1) இதச ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றுசொன்னால் அதுப்பற்றி தெரியாது.

10.அலிசும் , கிறிஸ்டியும் அடிகடி மாறிமாறி ஏசிக்கொள்வார்கள் என்றால் கிறிஸ்டி மட்டும் தான் அலிசை ஏசியது என் காதுக்கு கேட்டது. அலிஸ் ஏசியது என் காதுக்கு கேட்கவில்லை.

11. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை தான் போலிஸ் புகாரிலும்,விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

12.புகார்தாரருக்கும் எனக்கும், நல்லது கெட்டது உண்டு என்று சொன்னால் சரிதான்.

13. நானும், அலிசும் சேர்ந்து எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும், அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும் ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் என்ன என்றால் இரவு 08.00 மணியாகும்.

15.சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய பகுதி இருட்டாக தான் இருக்கும் என்று சொன்னால் இல்லை.

16.முத்துமாலையம்மன் கோவிலில் இருந்து அங்கன்வாடி வரை எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 20 வீடுகள் இருக்கும்.

17.சம்பவம் பற்றி குடும்ப உறுப்பினர்கள் தவிர வேறு யாருக்கும் தெரியுமா என்றால் குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும் தான் தெரியும் 3 ஆம் நபர்களுக்கு தெரியாது.

சாட்சியின் வாக்குமூலம் காணொலி காட்சி மூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 140 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திருமதி கண்மணி |
| Father Name | தியாகராஜன் |
| Village | குரங்கனி |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர் – எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 11-06-2026.(நேரம்: )**

**(சாட்சி சிஆர்எம்பி எண் 24/25 என்ற இடைநிலை விண்ணப்ப மனுவில் கடந்த 14.10.2025 ஆம் தேதி இந்த நீதிமன்றத்தால் பிறப்பிவிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மீள அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**(சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரிக்கப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை**

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்று கேட்டால் நான் குரங்கனியில் குடியிருந்து தற்போது சென்னையில் வசித்து வருகிறேன்.

2.எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஆம் எழுதப்படிக்க தெரியும்.

3.வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஒரு நாள் என்னை விசாரித்தார்கள்.

4.முதல் விசாரணையில் நான் சொன்ன சங்கதியை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5.போலிசார் என்னை எப்போது எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று கேட்டால் தேதி , நேரம் ஞாபகம் இல்லை. ஸ்ரீவைகுண்டத்தில் வாங்கினார்கள்.

6. போலிசார் என்னை எத்தனை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

7.போலிசாரிடம் நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேனா என்றால் 4,5 மாதங்களுக்கு முன்பாக வாங்கினார்கள் , எத்தனை பேப்பர் என்று ஞாபகம் இல்லை.

8.இந்த வழக்கில் அலிஸ் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் என் கணவரின் தம்பி மனைவி ஆவார்.

9.தன்ராஜ் , அருணை தெரியுமா என்றால் என் கணவரின் தம்பி மற்றும் அவரது மகன் ஆவார்.

10. அலிஸ்க்கும், தன்ராஜ் வகையாரவிற்கும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் கிடையாது.

11. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில்,சொன்ன விதத்தில் போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. புகார்தாரருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் காணொலி காட்சி மூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.